


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஒய்-296 ஊட்டுவாழ்மடம், புன்னைநகர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் செயல்பட்டு வரும் நியாயவிலை கடையில், குடும்ப அட்டையுடன் ஆதார் எண் இணைக்கும் பணியினை (Point of Sale) இன்று (09.11.2016) பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 787/2016 நாள்: 09.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நியாயவிலைக் கடைகளில் உள்ள மின்னணு விற்பனை முனைய இயந்திரத்தில் ஆதார் எண் இணைக்கும் பணியினை இன்று (09.11.2016) பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நியாயவிலைக் கடைகளில் உள்ள மின்னணு விற்பனை முனைய இயந்திரத்தில் ஆதார் எண் இணைக்கும் பணியினை இன்று (09.11.2016) பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட ஒய்-296 ஊட்டுவாழ்மடம், கோணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், ஒய்-296 ஊட்டுவாழ்மடம், புன்னைநகர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் ஒய்-160 வடசேரி, ஒழுகினசேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் செயல்பட்டு வரும் நியாயவிலை கடைகளில், மத்திய அரசின் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் 2013-ன் கீழ் 01.11.2016 முதல் 4 உறுப்பினர்கள் வரையுள்ள குடும்ப அட்டைதாரர்கள் ஏற்கனவே உள்ள அளவு அரிசியும் 4 உறுப்பினர்களுக்கு மேல் அதிகமாக உள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு நபருக்கு 5 கி.கி. வீதம் அரிசி நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டுவருகிறது.

மின்னணு விற்பனை முனைய இயந்திரத்தில் புதிய மென்பொருள் மூலம் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களின் விபரங்கள் பதிவு செய்யப்பட்டு வருவதை இன்று (09.11.2016) பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள், அகஸ்தீஸ்வரம் வட்ட வழங்கல் அலுவலர் திரு. கோலப்பன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.